# தொகுத்தறி மதிப்பீட்டுத் தேர்வு

## தமிழ் - ஏழாம் வகுப்பு

நேரம் - 2.00 மணி மதிப்பெண் : 60

**அ) சரியான விடையை தெரிவு செய்க :** **14 X 1 = 14**

1. தொல்காப்பியம் கடற்பயணத்தை------------வழக்கம் என்று கூறுகிறது ?
அ)நன்னீர் ஆ) தண்ணீர் இ) முந்நீர் ஈ)கண்ணீர்

2. தூண் என்னும் பொருள் தரும் சொல்-------------
அ) ஞெகிழி ஆ) சென்னி இ)ஏணி ஈ) மதலை

3.இன்று + ஆகி - எனும் சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது......
அ) இன்றுஆகி ஆ)இன்றிஆகி இ)இன்றாகி ஈ)இன்றாஆகி

4. ஒருவர் தம் குழந்தைக்கு சேர்த்து வைக்க வேண்டிய செல்வம்---------
அ) வீடு ஆ) கல்வி இ) பொருள் ஈ)அணிகலன்

5. கோட்டோவியம் எனும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது..................
அ) கோடு + ஓவியம் ஆ) கோட்டு + ஓவியம் இ) கோட்+டோவியம்

6. காலத்தின் அருமையை கூறும் திருக்குறள் அதிகாரம்------------
அ) கல்வி ஆ)காலமறிதல் இ)வினையறிதல் ஈ) மடியின்மை

7. எதுகை இடம்பெறாத இணை-------------------
அ) இரவு - இயற்க்கை ஆ) வங்கம் - சங்கம் இ) உலகு - புலவு
ஈ)அசைவு - இசைவு

8.பள்ளித் தலமனைத்தும் கோயில் செய்குவோம் ' என்று பாடியவர்.........
அ)திருக்குறளார் ஆ) திருவள்ளுவர் இ) கம்பர் ஈ) பாரதியார்.

9.கடலில் துறைமுகம் அறியாமல் கலங்குவன-------------------
அ) மீன்கள் ஆ) மாடங்கள் இ)தூண்கள் ஈ) மரக்கலங்கள்

10.கப்பல் ஒரிடத்தில் நிலையாக நிற்க உதவுவது......................................

11. கருத்துப்படங்களை அறிமுகப் படுத்தியவர்...................................................

12. பதத்தின் இருவகைகள் யாவை ?

13. இழைத்த மரத்தில் காணப்படும் உருவங்கள்...................................................

14.கல்வியில்லாத நாடு.......................................

**ஆ. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும் :** 5 X 2 = 10

15. மரக்கலங்களை துறைமுகம் நோக்கி அழைப்பது எது ?

16. தமிழ்மொழிக் கல்வி பயில்வதால் ஏற்படும் நன்மைகள் எது ?

17. நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும் ?

18. கப்பலின் உறுப்புகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுக ?

19. தாய்மையின் ஓவியத்தில் நிறைந்திருக்க வேண்டியவை யாவை ?

20. மனிதப்பிறவிக்கும் பிற உயிரினங்களுக்கிடையே உள்ள வேறுபாடு யாது ?

21. துன்பத்திற்கு துன்பம் உண்டாக்குபவர் யார் ?

22. பகுபத உறுப்புகள் எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**இ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி** 4 X 3 = 12

23. கடலில் கப்பல் செல்லும் காட்சியை அகநானூறு எவ்வாறு விளக்குகிறது ?

24. கல்வியே அழியாத செல்வம் என்பதனை விளக்குக ?

25. எட்டுத் தொகை நூல்கள் யாவை ?

26 இலக்கிய வகைச் சொற்க்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை ?

27. முதனிலை திரிந்த தொழிற்பெயர் என்றால் என்ன ? சான்று தருக.

28. கீரைப்பாத்தியும் குதிரையும் எக்காரணங்களால் ஒத்துப்போகின்றன ?

29. ஓலைச்சுவடி ஓவியங்கள் குறித்து குறிப்பு எழுது ?

**ஈ. அடிமாறாமல் எழுதுக** 4 + 2 = 6

30. " வானம் ஊன்றிய மதலை போல" எனத் தொடங்கும் கலங்கரை விளக்கப் பாடல்.

31. "அறிவு " என முடியும் குறளை எழுதுக.

**உ. அனைத்து வினாக்களுக்கும் விடையளி :** 6 X 1 = 6

அ) பொருத்த்மான காலம் அமையுமாறு திருத்தி எழுதுக.

32. அப்துல்லா நேற்று வீட்டுக்கு வந்தான்.

33. கண்மணி நாளை கம்பராமாயனம் படித்தாள்

**ஆ) கலைச்சொல் அறிக :**

34. Cartoon

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**இ. இரு பொருள் தருமாறு தொடரில் அமைக்க :**

35. ஆறு

**ஈ. ஓர் எழுத்து சொற்களால் நிரப்புக**

36. ----------பேசும்

37.------------ மணம் வீசும்

**ஊ. ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி :** 1 X 5 = 6

38,மதிவானன் பள்ளிக்கு செல்ல முடிவெடுத்த நிகழ்வை சுருக்கி எழுது ?

39. நீங்கள் ஒரு கலைஞராக இருந்தால் எத்தகைய படைப்புகளை உருவாக்குவீர் ?

40.நல்ல நூலின் இயல்புகளாக நீங்கள் கருதுவது யாது ?

**எ, குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக** 1 X 6 = 6

41. முன்னுரை - பயணத்தின் தேவை - தரை வழிப் பயணம் - கடல் வழிப் பயணம் - வான் வழிப் பயணம். (**அல்லது**)

42. உங்கள் பகுதியில் நூலகம் அமைய வேண்டி நூலக ஆணையருக்கு கடிதம் எழுது.

ஆக்கம் : மு.ஜமால் முகமது / தலைமை ஆசிரியர் / மவுண்ட் ஹிரா அகாடமி - நெல்லிக்குப்பம்.